செ. கு. எண்:284 நாள் :20.10.2013

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 20.10.2013

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், கொணலை கிராமம், திருச்சிராப்பள்ளி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் 29.8.2013 அன்று சாலையை கடக்க முயன்ற கொணலை கிராமத்தைச் சேர்ந்த திரு. அமிர்தம் என்பவரது மனைவி திருமதி ஜோஸ்பின்மேரி;

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், மொடச்சூர் சாலை அருகே 5.9.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திரு. சுப்பிரமணியம் என்பவரது மகன் மதியழகன் சம்பவ இடத்திலேயும்; திரு. சுப்பன் என்பவரது மகன் முருகன் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 7.9.2013 அன்றும்;

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகரம், சைதாப்பேட்டை பகுதி அருகே 6.9.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த பையூர் நகரைச் சேர்ந்த திரு. சந்திரன் என்பவரின் மகன் வேலு;

சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை அருகே 7.9.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த கொருக்குப்பேட்டை, ரங்கநாதபுரத்தைச் சேர்ந்த திரு. சிவா என்பவரின் மகன் தனசேகரன்;

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், இரூர் கிராமம் அருகே 8.9.2013 அன்று வேனில் பயணம் செய்த மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் வேலாயுதம்;

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், எறும்பூர் சந்திப்பு அருகே 9.9.2013 அன்று வேனில் பயணம் செய்த செய்யார் வட்டம், குன்னவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி அமுதா மற்றும் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த வந்தவாசி வட்டம், கீழ்குவளைமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னப்பன்;

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், மேலாத்தூர் கிராமம் அருகே 9.9.2013 அன்று சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த திரு. கந்தன் என்பவரின் மனைவி மாசாணம்;

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், உச்சபட்டி கிராமம் அருகே 9.9.2013 அன்று சாலையை கடக்க முயன்ற திரு. நாகையா;

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், ஒட்டர்பாளையம் கிராமம் அருகே 12.9.2013 அன்று வேனில் பயணம் செய்த மேட்டுப்பாளையம் வட்டம், காரமடையைச் சேர்ந்த திரு. பால்ராஜ் என்பவரின் மகன் பூவராஜா மற்றும் அவரது மனைவி சுசிலா;

–– ஆகியோர் அரசுப் பேருந்து மோதியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாமக்கல் மாவட்டம், நல்லிபாளையம் வட்டம், நாமக்கல் – திருச்செங்கோடு சாலையில் 9.9.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது போலீஸ் ஜீப் மோதியதில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த தும்மங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. சங்கர் மற்றும் திரு. கோவிந்தன் ஆகிய இருவரும் படுகாயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், நாமக்கல் மாவட்டம், நல்லிபாளையம் வட்டம், நாமக்கல் – திருச்செங்கோடு சாலையில் 9.9.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் படுகாயமடைந்த திரு. சங்கர் மற்றும் திரு. கோவிந்தன் ஆகிய இருவருக்கும் தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**